**சுருக்கம்**

அறிவிப்புகள் – மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பு – பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நலன் – கல்வி – விடுதிகள் – கிருஷ்ணகிரி மாவட்டம், கெலமங்கலத்தில் பிற்படுத்தப்பட்டோர் நலப் பல்தொழில்நுட்பக் கல்லூரி மாணவர் விடுதி தொடங்குதல் - செலவினம் ரூ.25,01,730/- நிதி ஒப்பளிப்பு வழங்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல (பிந1(2))த் துறை**

**அரசாணை (நிலை) எண்.64** **நாள் : 13.08.2024**

**குரோதி, ஆடி – 28**

**திருவள்ளுவர் ஆண்டு, 2055.**

படிக்கப்பட்டது:

பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையரின் கடித எண்.சி1/4749/2023, நாள் 08.03.2024 மற்றும் 28.03.2024.

******

**ஆணை:**

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் 11.03.2024 அன்று நடைபெற்ற அரசு விழாவில் கீழ்க்காணும் அறிவிப்பு வெளியிடப்பட்டது.

"கெலமங்கலம் அரசு பல்தொழில்நுட்பக் கல்லூரி வளாகத்தில் 100 மாணவர்கள் தங்கும் வகையில், 'புதிய பிற்படுத்தப்பட்டோர் நல பல்தொழில்நுட்ப கல்லூரி மாணவர் விடுதி' தொடங்கப்படும்."

2. மேற்காணும் அறிவிப்பினைச் செயல்படுத்தும் விதமாக மேலே படிக்கப்பட்ட பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையரின் கடிதத்தில், கிருஷ்ணகிரி மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலரால் கெலமங்கலம் அரசு பல்தொழில்நுட்பக் கல்லூரி வளாகத்தில் அமைந்துள்ள கல்லூரிக்குச் சொந்தமான விடுதிக்

கட்டிடத்தில் புதிதாக பிற்படுத்தப்பட்டோர் நலப் பல்தொழில்நுட்பக் கல்லூரி மாணவர் விடுதி தொடங்க போதுமான கட்டட அறை வசதிகள் உள்ளதாக தெரிவித்து கல்லூரி முதல்வரின் எழுத்துப்பூர்வமான ஒப்புதல் கடிதம் அளிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

3. பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையர், கிருஷ்ணகிரி மாவட்டம் கெலமங்கலம் அரசு பல்தொழில்நுட்ப கல்லூரி வளாக்கத்தில் அமைந்துள்ள கல்லூரிக்கு சொந்தமான விடுதிக் கட்டிடத்தில் புதிதாக 100 எண்ணிக்கை கொண்ட பிற்படுத்தப்பட்டோர் நல பல்தொழில்நுட்ப கல்லூரி மாணவர் விடுதி தொடங்கும் நிலையில், கன்னியாகுமரி மாவட்டம், மார்த்தாண்டம் அரசு பிற்படுத்தப்பட்டோர் பள்ளி மாணவர் விடுதியில் மாணவர் சேர்க்கை இல்லாததால் அவ்விடுதிக்கு ஒப்பளிக்கப்பட்ட பணியிடங்களை சரண் செய்து அதற்கு பதிலாக கீழ்கண்ட பணியிடங்களை நிரந்தரப் பணியிடங்களாகத் தோற்றுவிக்குமாறும், மேலும், புதிய கல்லூரி விடுதி தொடங்குவதால் ஏற்படும் தொடர் செலவினம், ரூ.17,82,080/- மற்றும் தொடராச் செலவினம் ரூ.7,19,650/- என மொத்தம் ரூ.25,01,730/- செலவாகும் என தெரிவித்து மேற்படி விடுதி தொடங்க அனுமதியும் நிதி ஒப்பளிப்பும் வழங்குமாறு அரசைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

<u>புதிதாக தோற்றுவிக்கப்படும் பணியிடங்கள்</u>

| வ. எண் | பணியிடங்கள் விவரம் | ஊதிய நிலை | விடுதிக்கான பணியிடங்கள் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1. | போதகக் காப்பாளர் | நிலை-16, ரூ.36400-134200 | 1 |
| 2. | சமையலர் மற்றும் உதவி சமையலர் | நிலை-1, ரூ.15700- 58100 | 2 |
| 3. | காவலர் / ஏவலர் | நிலை-1, ரூ.15700- 58100 | 1 |
| 4. | துப்பரவு பணியாளர் | (மாதம் ரூ. 3000/- தொகுப்பூதியம்) | 1 |

<u>சரண் செய்யப்படும் பணியிடங்கள்</u>

விடுதியின் பெயர் - கன்னியாகுமரி மாவட்டம், மார்த்தாண்டம் அரசு பிற்படுத்தப்பட்டோர் நலப் பள்ளி மாணவர் விடுதி

| வ. எண் | பணியிட விபரம் (அரசாணை (நிலை) எண்.91, பி.மிபி.(ம) சிபா நலத்துறை, நாள் 14.08.2008-ன்படி) | ஊதிய நிலை | விடுதிக்கு ஒப்பளிக்கப்பட்ட எண்ணிக்கை | IFHRMS Post Code |
|---|---|---|---|---|
| 1. | காப்பாளர் | நிலை-16, ரூ.36400-134200 | 1 | 1890373 |
| 2. | சமையலர் | நிலை-1, ரூ.15700- 58100 | 2 | 532353 |
| | | | | 532354 |
| 3. | காவலர்/ஏவலர் | நிலை-1, ரூ.15700- 58100 | 1 | 532107 |
| 4. | துப்புரவுப் பணியாளர் | (மாதம் ரூ. 3000/- தொகுப்பூதியம்) | 1 | (தொகுப்பூதியம்) |

4. பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையரின் கருத்துருவினை ஆய்வு செய்து அதனை ஏற்று, கிருஷ்ணகிரி மாவட்டம் கெலமங்கலம் அரசு பல்தொழில்நுட்பக் கல்லூரி வளாகத்தில் அமைந்துள்ள கல்லூரிக்குச் சொந்தமான விடுதிக் கட்டிடத்தில், 100 மாணவர்கள் தங்கும் வகையில் பிற்படுத்தப்பட்டோர் நலப் பல்தொழில்நுட்பக் கல்லூரி மாணவர் விடுதி புதிதாகத் தொடங்கிடவும், புதியதாக தொடங்கப்படும் விடுதிக்கு ஒரு போதகக் காப்பாளர் ஒரு சமையலர், ஒரு உதவி சமையலர், ஒரு காவலர்/ஏவலர் என மொத்தம் 4 பணியிடங்களை காலமுறை ஊதியத்திலும் ஒரு துப்புரவுப் பணியாளர் பணியிடத்தை தொகுப்பூதிய (மாதம் ரூ.3000) அடிப்படையிலும் தோற்றுவிக்கவும் அதற்கு பதிலாக கன்னியாகுமரி மாவட்டம், மார்த்தாண்டம் அரசு பிற்படுத்தப்பட்டோர் நலப் பள்ளி மாணவர் விடுதிக்கு ஒப்பளிக்கப்பட்ட பத்தி 3ல் குறிப்பிட்டுள்ள பணியிடங்களை சரண் செய்யவும், இவ்விடுதி தொடங்குவதால் ஆண்டொன்றிற்கு தேவைப்படும் தொடர் செலவினம் ரூ.17,82,080/- மற்றும் தொடராச் செலவினம் ரூ.7,19,650/- என மொத்தம் ரூ.25,01,730/- (ரூபாய் இருபத்து ஐந்து இலட்சத்து ஆயிரத்து எழுநூற்று முப்பது

மட்டும்) (இணைப்பில் குறிப்பிட்டுள்ளவாறு) நிதி ஒப்பளிப்பு வழங்கியும் அரசு ஆணையிடுகிறது.

5. மேலே பத்தி 4-ல் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள தொகை கீழ்க்காணும் கணக்குத் தலைப்புகளின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

<u>பிற்படுத்தப்பட்டோர் நலன் –</u>

<u>(பல்தொழில்நுட்பக் கல்லூரி மாணவர் விடுதி)</u>

"2225 – ஆதி திராவிடர், பழங்குடியினர், ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சிறுபான்மையினர் நலன் – 03 – பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் – 277 – கல்வி – மாநிலச் செலவினங்கள் – AA – பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மாணவர் இல்லங்கள்.

| வ. எண் | கணக்குத் தலைப்பு | | IFHRMS த.தொ.கு | தொகை (ரூ.) |
|---|---|---|---|---|
| | **தொடர் செலவினம்** | | | |
| 1. | 318 | பராமரிப்பு | 2225-03-277-AA - 31801 | 50,000 |
| | 01 | குறித்த காலப் பராமரிப்பு | | |
| 2. | 324 | பொருள்களும் வழங்கலும் | 2225-03-277-AA - 32401 | 1.50,000 |
| | 01 | பொருள்களும் வழங்கலும் | | |
| 3. | 367 | உணவளிக்கும்/ உணவுச் செலவுகள் | 2225-03-277-AA - 36709 | 15,70,800 |
| | 09 | ஏனையவை | | |
| 4. | 305 | அலுவலகச் செலவுகள் | 2225-03-277-AA – 30501 | 8,880 |
| | 01 | தொலைப்பேசி கட்டணங்கள் | | |
| 5. | 318 | பராமரிப்பு | 2225-03-277-AA – 31801 | 2,400 |
| | 01 | குறித்த கால பராமரிப்புச் | | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | செலவினம் | | |
| | | | மொத்தம் | 17,82,080 |
| | | தொடராச் செலவினம் | | |
| 6. | 305 | அலுவலகச் செலவுகள் | 2225-03-277-AA – 30505 | 52,000 |
| | 05 | அறைகலன் | | |
| 7. | 319 | இயந்திரமும் சாதனமும் | 2225-03-277-AA – 31901 | 3,78,250 |
| | 01 | வாங்குதல் | | |
| 8. | 334 | ஏனைய செலவுகள் | 2225-03-277-AA – 33401 | 25,000 |
| | 01 | ஏனைய இனங்கள் | | |
| 9. | 324 | பொருள்களும் வழங்கலும் | 2225-03-277-AA – 32401 | 1,29,400 |
| | 01 | பொருள்களும் வழங்கலும் | | |
| 10. | 334 | ஏனையச் செலவுகள் | 2225-03-277-AA – 33402 | 50,000 |
| | 02 | நூலகங்கள் முதலியவற்றிக்கு புத்தகங்கள், குறித்த கால வெளியீடுகள் வாங்குதல் | | |
| 11. | 305 | அலுவலகச் செலவுகள் | 2225-03-277-AA – 30501 | 5,000 |
| | 01 | தொலைபேசிக் கட்டணங்கள் | | |
| 12. | 376 | கணினியும் துணைப் பாகங்களும் | 2225-03-277-AA – 37601 | 80,000 |
| | 01 | வாங்குதல் | | |
| | | | மொத்தம் | 7,19,650 |

6. மேலே பத்தி 4-இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்தை மேற்கொள்ள தேவையான நிதியொதுக்கம் ரூ.25,01,730/-ஐ, 2024-2025 ஆம் ஆண்டுக்கான திருத்த மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் ஒதுக்கீடு செய்யப்படும். இருப்பினும் மேற்கண்ட செலவினத்திற்கு 2024-2025 ஆம் ஆண்டிற்கான துணை மானியக்

கோரிக்கையில் ஒரு சிறப்பு நிகழ்வாக கொணர்ந்து சட்ட மன்றப் பேரவையில் ஒப்புதல் பின்னர் பெறப்படும். இந்நிதியொதுக்கம் செய்ய இருப்பதை எதிர்நோக்கி, மேலே பத்தி 4-இல் ஒப்பளிக்கப்பட்ட தொகையினை பெற்று வழங்கிட பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையர் அவர்களுக்கு அனுமதி அளிக்கப்படுகிறது. மேலும், பத்தி 4-இல் அனுமதிக்கப்பட்ட செலவினத்தை 2024-2025 ஆம் ஆண்டிற்கான துணை மதிப்பீடுகளில் சேர்ப்பதற்கு உரிய வரைவு விளக்கக் குறிப்பினையும் மற்றும் திருத்த மதிப்பீடு/ இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் சேர்ப்பதற்கு உரிய கருத்துருவையும் தவறாது நிதி (பி.மிபி(ம)சிந./வ.செ.பொது-1) துறைக்கு அனுப்பி வைக்குமாறு பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையர் அவர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

7. மேற்காணும் புதிய விடுதி முறையாகத் தொடங்கப்பட்ட பின்னர் உரிய அறிக்கையினை அரசுக்கு அனுப்பி வைக்குமாறு பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

8. இவ்வரசாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற எண்.6950109/நிதி(பி,மிபி(ம)சிந)/2024, நாள் 04.07.2024 மற்றும் பணியிடப் பேரேட்டு எண்.202407PSL0112-ல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது. இதற்கான கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண்.0353 (முந்நூற்று ஐம்பத்து மூன்று) (IFHRMS ASL No.2024070353)

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**சா.விஜயராஜ் குமார்,**
**அரசு முதன்மைச் செயலாளர்.**

**பெறுநர்**

பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையர், சென்னை- 5.
மாநில கணக்காயர், சென்னை-18. (பெயரில்)
மாநில கணக்காயர் (தணிக்கை- 1),
சென்னை-18. (பெயரில்).
மாநில கணக்காயர், (தணிக்கை-2),
சென்னை-18. (பெயரில்).

சம்பளக்கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை -8.
மாவட்ட ஆட்சியர், கிருஷ்ணகிரி
கிருஷ்ணகிரி மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும்
சிறுபான்மையினர் நல அலுவலர்கள்

<u>**நகல்**</u> :

மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலன், சென்னை-5.
சிறுபான்மையினர் நல இயக்குநர், சென்னை-5.
மாண்புமிகு அமைச்சர் (நிதி மற்றும் மனிதவள மேலாண்மை)
அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை- 9
மாண்புமிகு அமைச்சர் (பிற்படுத்தப்பட்டோர் நலன்)
அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை- 9.
பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும்
சிறுபான்மையினர் நலத்துறை முதன்மைச் செயலாளர் அவர்களின்
முதுநிலை முதன்மைத் தனிச்செயலர், சென்னை-9.
நிதி (பி.மி.பி./வ.செ.பொது I & வ.செ.பொது- II ,வ.வ I)த் துறை,
சென்னை-9.
நிதி (மை.ம.ஆ.பி)த் துறை, சென்னை-9.
இருப்புக் கோப்பு / உபரி நகல்

**//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//**

13/08/2024
**பிரிவு அலுவலர்.**
13/08/2024

அரசாணை (நிலை) எண்.64, பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல (பிந1(2)த் துறை, நாள் 13.08.2024-ன்

இணைப்பு-I

தொடர் செலவினம்

| வ. எண் | விவரங்கள் | தொகை (ரூ.) |
|---|---|---|
| 1. | குறித்த கால பராமரிப்பு செலவினம் (ரூ.50,000/- ) | 50.000 |
| 2. | சோப்பு மற்றும் தேங்காய் எண்ணெய் (100X150X10) | 1,50,000 |
| 3. | 100 மாணவர்கள் மற்றும் 2 சமையலர்களுக்கான உணவுக் கட்டணம் ( 102 X 1500 X 10 = 1530000) | 15.30,000 |
| 4. | சிறப்பு உணவு செலவினம் ( 102 x 5 x 80= ரூ.40800) | 40,800 |
| 5. | தொலைப்பேசி கட்டணம் ஒரு வருடத்திற்கான செலவு (740 x12 ) | 8,880 |
| 6. | DTH இணைப்பு ஒரு வருடத்திற்கான செலவு | 2,400 |
| | மொத்தம் | 17,82,080 |

சா.விஜயராஜ் குமார்,
அரசு முதன்மைச் செயலாளர்.

// உண்மை நகல் //

13/08/2024
பிரிவு அலுவலர்.
13/08/2024

அரசாணை (நிலை) எண்.64, பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல(பிந1(2))த்துறை, நாள் 13.08.2024-ன்

இணைப்பு-II

தொடராச் செலவினம்

| வ. எண். | | பொருட்கள் | விடுதிக்கான செலவினம் (ரூ.) |
|---|---|---|---|
| 1 | | மரச்சாமன்கள் ( ரூ. 40,000)<br>புத்தக அலமாரி (ரூ 12,000) | 52000 |
| | | **இயந்திரமும் சாதனமும்** | |
| 2 | i) | எரிவாயு இணைப்பு | 50000 |
| | ii) | அரவை இயந்திரம் | 25000 |
| | iii) | குடிநீர் சுத்திகரிப்பு கருவி | 15000 |
| | iv) | இன்வெர்ட்டர் | 15000 |
| | v) | முதலுதவிப் பெட்டி | 1250 |
| | vi) | விளையாட்டுக் கருவிகள்<br>( விளையாட்டுக் கருவிகள் - 20000+<br>உடற்பயிற்சி கருவிகள் - 50000) | 70000 |
| | vii) | வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி<br>(43" LED) | 40000 |
| | viii) | பூச்சி அழிப்பான் | 6000 |
| | ix) | மின் அரைப்பான் | 6500 |
| | x) | இட்லி வேகவைப்பான் | 13500 |
| | xi) | தீயணைப்பான் | 6000 |
| | xii) | தோசைக்கல் மற்றும்<br>இடியாப்பக்கருவி | 30000 |
| | xiii) | CCTV கேமரா | 100000 |
| 3 | | பாத்திரம் | 40000 |
| 4 | | **பொருட்களும் வழங்கலும்** | |
| | i) | ஜமக்காளம் (100 x ரூ. 496) | 49600 |
| | ii) | தட்டு மற்றும் டம்ளர் (100 x ரூ.125) | 12500 |
| | iii) | பெட்ஷீட் (100x ரூ. 323) | 32300 |
| | ரூ | தலையணை (100X ரூ. 200) | 20000 |

| | | |
|---|---|---|
| 6 | செம்மொழி நூலகம் | 50000 |
| 7 | தொலைப்பேசி இணைப்பு பெறுவதற்கான கட்டணம் | 5000 |
| 8 | மின் நூலகம் | 80000 |
| | மொத்தம் | 7,19,650/- |

**சா.விஜயராஜ் குமார்,**
**அரசு முதன்மைச் செயலாளர்.**

**// உண்மை நகல் //**

[signature] 13/08/2024
பிரிவு அலுவலர்.
[initials]
13/08/2024